In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

Spl.C.C.No. 35/2014	Prosecution witness P.W.29
Name: Sundararajan	Calling:
Father Name:	Religion:
Village:	Caste:
Taluk:	Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 18.02.2026.

(Accused present.)

முதல் விசாரணை :–

நான் காவல்துணை கண்காணிப்பாளராக தேனி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பணியாற்றி சென்ற 31.05.2025ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் சென்ற 18.09.2009 முதல் 15.07.2016ம் தேதிவரை திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். சென்ற 14.07.2005ம் தேதி திண்டுக்கல் ஊழல் தடுப்பு சட்டம் 1988 சட்ட பிரிவுகள் 13(2) உ/இ 13(1)(e) மற்றும் 109 இதச பிரிவின்படி எதிரிகள் வி.சொக்கலிங்கம் மற்றும் அவரது மனைவி மரகதம், மகன் தினேஷ்குமார், மருமகன் குமார் மற்றும் எதிரியின் மாமனார் பொன்னுச்சாமி ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கில் முன்பு காவல் துணை கண்காணிப்பாளர்களாக பணியாற்றிய திரு.ரத்தினகுமார் அவர்களும், திரு.ராஜாமுகமது அவர்களும் புலன் விசாரணை செய்துள்ளார்கள். பின்னர் ஆவணங்கள் சேகரித்தும், சாட்சிகள் விசாரணை செய்தும் திரு.ராஜா முகமது அவர்கள் தனது விசாரணை அறிக்கையை ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைத்திருந்தார். அதன் பிறகு எனக்கு முன்பு பணியாற்றி காவல் ஆய்வாளர் திரு.மனோகரன் அவர்கள் இந்த வழக்கில் ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 17ன்படி உரிய அனுமதி பெற்று புலன்

விசாரணை மேற்கொண்டுள்ளார். சட்டப்பிரிவு 17 ன்படி காவல் கண்காணிப்பாளர் திருமதி.கே.பவானிஷ்வரி, IPS அவர்களிடமிருந்து RC.No.172/2005/FOR/DL/dated 26.11.2008 ன்படி அனுமதி வழங்கப்பட்டது. **அந்த அனுமதி நடவடிக்கை அதசாஆ.222.** அதன் தொடர்ச்சியாக ஆய்வாளர் திரு.மனோகரன், இயக்குநர், ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை நாள் 26.11.2008 ன்படி இந்த வழக்கில் ஆய்வுக்காலமான 01.01.1992 முதல் 31.12.2001 வரை எதிரி அலுவலர் தனது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியலை(Statement I to VII) காட்டி அதற்கு விளக்கம் கேட்டு 08.12.2008 ம் தேதி எதிரி திரு.சொக்கலிங்கம் அவர்களுக்கு இறுதி வாய்ப்பு நோட்டீஸ் வழங்கியுள்ளார். **அந்த அறிவிப்பு அதசாஆ.223.** அந்த அறிவிப்பை பெற்ற எதிரி அவரது விளக்கத்தை 19.01.2009 ம் தேதி அனுப்பிவைத்துள்ளார். **எதிரி கொடுத்த 19.01.2009 ம் தேதியிட்ட விளக்கம் அதசாஆ.224. (பக்கம் 3 முதல் 82).** அந்த விளக்கத்தை பெற்று தனது விசாரணை அறிக்கையை 25.02.2009 ம் தேதி இயக்குநர், ஊழல் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கு ஆய்வாளர் மனோகரன் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் ஆய்வாளர் திரு மனோகரன் அவர்கள் 18.09.2009 ம் தேதி பணிமாறுதலில் சென்றுவிட்டார். அதன் பிறகு இந்த வழக்கு கோப்புக்களை நான் பெற்றுக்கொண்டேன். அன்றைய தினமே 18.09.2009 ம் தேதி மேற்படி வழக்கு விசாரணைக்கு அதிகாரம் வழங்கும் ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 17 ன்படி RC.No.172/2005/FOR/DL/dated 18.09.2009 ஆக காவல் கண்காணிப்பாளர் திருமதி.கே.பவானிஷ்வரி அவர்களால் வழங்கப்பட்டதை பெற்றுக்கொண்டேன். அதன் பிறகு இயக்குநர், ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை நாள் 15.07.2010 ல் அறிவுறுத்தியதன்படி இந்த வழக்கில் எதிரி திரு.சொக்கலிங்கம் அவர்கள் மீது சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடர முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை அவர்களை சந்தித்து

இசைவு ஆணை பெற அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி நான் சென்ற 21.06.2010ம் தேதியன்று திரு.ஏ.எஸ்.பாலநாதன், IFS, முதன்மை தலைமை வனப்பாதுகாப்பு அலுவலர், சென்னை அவர்களிடம் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஆஜர்படுத்தினேன். அதன்பிறகு 28.06.2010ம் தேதியிட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாப்பு அலுவலர், சென்னை அவர்களின் இசைவு ஆணை, இயக்குநர் ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை, சென்னை அவர்கள் மூலம் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதற்காக 14.07.2010ம் தேதி திரு. ஏ.எஸ்.பாலநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கில் புலன் விசாரணையை முடித்து எனக்கு முன்பு இருந்த அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் அடிப்படையிலும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் எதிரி திரு.சொக்கலிங்கம் அவர்கள் மீது விசாரணை அதிகாரிகளால் இந்த வழக்கில் எடுத்துக்கொண்ட ஆய்வுக்காலமான 01.01.1992 முதல் 31.12.2001 வரை Statement I to VII கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி Statement I ஆனது 01.01.1992 வரையில் எதிரி தனது மற்றும் தனது குடும்பத்தார் பெயரில் வைத்திருந்த சொத்துக்களின் மதிப்பு ரூ.37,634/- என்று கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி Statement I ல் 6 அயிட்டங்கள் காட்டப்பட்டுள்ளது. குறியீட்டு காலம் 31.12.2001 முடிய உள்ள காலத்திற்கு எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் பேரில் உள்ள சொத்துக்கள் ரூ.55,85,134.01 ஆகும். (Statement No.2). மேற்படி ஸ்டேட்மெண்ட் 2ல் 95 அயிட்டங்கள் காட்டப்பட்டுள்ளது. குறியீட்டுக்காலத்தில் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் பெயரில் உள்ள வருமானம் ரூ.10,03,042.01 ஆகும். (Statement 3). மேற்படி ஸ்டேட்மெண்ட் 3ல் 6 அயிட்டங்கள் காட்டப்பட்டுள்ளது. குறியீட்டுக்காலத்தில் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் செய்த செலவு ரூ.62,20,417 ஆகும். (Statement 4). மேற்படி ஸ்டேட்மெண்ட் 4ல் 18 அயிட்டங்கள் காட்டப்பட்டுள்ளது. குறியீட்டுக்காலத்தில் எதிரி மற்றும்

அவரது குடும்பத்தார் சேர்த்த அதிகமான சொத்து ரூ.55,47,500.01 ஆகும். (Statement 5=Statement 2–Statement 1). குறியீட்டுக்காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக செலவு செய்த விவரம் கணக்கிடப்பட்டதில் ரூ.52,17,374.99 (Statement 6=Statement 4–Statement 3) ஆக எதிரியும் அவரது உறவினர்களும் ரூ.1,07,64,875 வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்க்கப்பட்டதாக கணக்கிடப்பட்டது (Statement 7=Statement 5+Statement 6). இந்த வழக்கில் எதிரி தனது மற்றும் தனது குடும்பத்தாருக்கு கிடைக்கப்பெற்றதாக Statement III ல் சொல்லப்பட்டுள்ள வருமானத்தொகைக்கு அதிகமாக மேற்படி ஆய்வுக் காலத்தில் எதிரி அவர்கள் தனது மற்றும் குடும்பத்தார் சார்பாக செலவு செய்துள்ளால் இந்த வழக்கில் Statement IV ல் இருந்து Statement III ஐ கழித்து அதிகப்படியான செலவு தொகை ரூ.5217374.99 என்று கணக்கிடப்பட்டு அந்த அதிகப்படியான செலவு தொகையானது எதிரியானவரின் வருமானத்திற்கு அதிகமான சொத்துக்களுக்கான தொகையில் சேர்க்கப்பட்டு மொத்த வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்ட தொகை ரூ.1,07,64,875/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது. (ரூ.55,47,500.01+ரூ,52,17,374.99=ரூ.1,07,64,875/–). மேற்படி இறுதி அறிக்கையுடன் மேற்படி Statement I to VII ஐ தாக்கல் செய்தேன். **அந்த ஸ்டேட்மெண்ட்கள் அதசாஆ.225 வரிசை**. எனக்கு இவ்வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்ட **அனுமதி கடிதம் நாள் 18.09.2009 அதசாஆ.226.** ஆய்வாளர் திரு அருள்அமரன் அவர்கள் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வீடுகளை சோதனை செய்ய 1. திரு.விஜயகுமார், ஆய்வாளர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு திருச்சி 2. திரு எம்.அதிசயமணி ஆய்வாளர்,ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு புதுக்கோட்டை, 3. திரு.ஏ.பெரியசாமி, ஆய்வாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு, சேலம், திரு.ஆர்.பாண்டியராஜன், ஆய்வாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை ஆகியோர்களை நியமித்தது சம்மந்தமாக திண்டுக்கல் தலைமை

குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிய **முன் தகவல் கடிதம் நாள் 14.07.2005 அதசாஆ.227.** மேலும் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகள் 2 முதல் 5 வரையானவர்களை நீக்கி எதிரி திரு.சொக்கலிங்கம் அவர்கள் மீது மேற்படி வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மதிப்பு ரூ. ரூ.1,07,64,875/– சேர்த்ததாக ஊழல் தடுப்புச்சட்டம் 1988 சட்டப்பிரிவுகள் 13(2) r/w 13(1)(e)ன்படி திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களின் நீதிமன்றத்தில் 11.10.2010 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

நீதிமன்றக்கேள்வி

கேள்வி–முதல் தகவல் அறிக்கை 5 எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் குற்ற இறுதி அறிக்கையில் நான்கு எதிரிகளை நீக்கி குற்ற இறுதி அறிக்கை எதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளீர்கள்?

பதில்–எதிரி 2 திருமதி. மரகதம்மாள் அவர்கள் பைரோபோபியா மற்றும் சைக்கலாஜிக்கள் டிஸ்ஆர்டர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவரை வழக்கிலிருந்து நீக்கிவிட்டேன். எதிரி 3 தினேஷ்குமார் என்பவர் ஆய்வுக்காலத்தில் மைனராக இருந்ததால் அவரையும் நீக்கிவிட்டேன். எதிரி 4 மற்றும் எதிரி 5 ஆகியோர்களுக்கு அவர்களது தனிப்பட்ட வருமானம் இருந்ததால் அவர்களையும் நீக்கிவிட்டேன்.

கேள்வி – எதிரி 2 ற்கு மேற்படி நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா?

பதில்–இல்லை

கேள்வி– எதிரி 3 இதுபோன்ற வழக்குகளில் மைனராக இருந்தால் அவர்களை நீக்கிவிடுவீர்களா?

பதில் –இது சம்மந்தமாக இயக்குநர், ஊழல் தடுப்புத்துறை சென்னை அவர்களின் உத்தரவின்படி நீக்கியுள்ளோம்

கேள்வி – அந்த உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா?

பதில்–தாக்கல் செய்யவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

இவ்வழக்கில் எதிரி சொக்கலிங்கத்திடம் இருந்து எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். எதிரியின் உறவினர்களிடம் இருந்தும் எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 11.10.2010 ம் தேதியன்று மட்டும்தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் எந்த ஒரு இடத்திலும் எதிரிக்கு இறுதி வாய்ப்பு அளிக்கப்பட்டு அதற்கு அவர் விளக்கம் கொடுத்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆய்வுக்காலமானது 01.01.1992 முதல் 31.12.2001 வரை 10 ஆண்டுகாலம் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் மனோகரன் எதிரிக்கு வழங்கிய இறுதி வாய்ப்பு அறிவிப்பை நான் பார்வையிட்டு அந்த அறிவிப்பைத்தான் குற்ற இறுதி அறிக்கையில் ஆவண எண்.211 ஆக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு எதிரி கொடுத்த விளக்கத்தை ஆவண எண்.212 ஆக குற்ற இறுதி அறிக்கையில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி அளித்துள்ள விளக்கத்தில் அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு அனைத்தையும் மறுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த விளக்கத்தில் அவரது குடும்பத்தார்கள் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேலும் அந்த விளக்கத்தில் அவரது குடும்பத்தார்கள் சுயமாக சம்பாதித்த சொத்துக்களுக்கு அவரவர்கள் சொத்துவரி செலுத்தி வருகிறார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. வருமானவரி செலுத்தி வந்ததாக சொல்லியுள்ளார். 2000–2001 வருடங்களில் இருந்து மரகதம்

அம்மாளுக்கும் தினேஷ்குமாருக்கும் வருமானவரி செலுத்தியுள்ளதாக ஆவணங்கள் கோப்பில் உள்ளது. எதிரியின் விளக்கத்தை சரிவர பார்வையிடாமல் ஸ்டேட்மெண்ட 1 முதல் 7 ஐ தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேலும் எதிரி கொடுத்த விளக்கத்தில் அவரது குடும்பத்தார்கள் தனித்தனியாக சம்பாதித்த விவரத்தையும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார் என்றால் வழக்கில் கூடுதல் தகவலாக சொல்லும் அளவிற்கு விரிவாக சொல்லவில்லை. எதிரி கொடுத்த விளக்கத்தில் தனது குடும்பத்தார்கள் பெயரில் உள்ள சொத்துக்களுக்கும் தனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் எதிரியானவர் அவரது மனைவி, மகன் பெயரில் சொத்துக்கள் வாங்கிய வகையில் வருமானத்திற்கு அதிகமாக ரூ.1,07,64,875/– மதிப்பிற்கு சொத்து சேர்த்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி அவரது மனைவி மற்றும் மகன் பெயர்களில் எதிரிதான் சொத்துக்களை வாங்கிக்கொடுத்தார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி 2 மற்றும் 3 ஆகியோர்களுக்கு சுயசம்பாத்திய வருமானம் எதுவும் இல்லை. எதிரியை சார்ந்துதான் அவர்கள் உள்ளார்கள். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டு உள்ள மகேந்திரா மார்சல் ஜீப் TN–57–X–6161 திருப்பதி என்பவர் பெயரில் மகேந்திரா பைனான்ஸ்.ல் இருப்பதாக தெரியவந்தது. அந்த திருப்பதி எதிரியின் உறவினர். அதசாஆ.225 ல் Statement II ல் வரிசை எண்.91 ல் காட்டப்பட்டுள்ளது. TN–57–B–0076 என்ற இருசக்கர வாகனம் Hero Honda Motor Cycyle ரமேஷ் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரமேஷ் எதிரியின் மருமுகன். TN27–B–7180 TVS Suzuki Max 100 வாகனம் எதிரியின் மகன் தினேஷ்குமார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவர் மைனராக இருக்கும்போது கார்டியனாக எதிரி பெயர் போடப்பட்டு வாங்கப்பட்டுள்ளது. அதசாஆ.146, 147, 148 வருமானவரி கணக்குகளை எனக்கு முன்னர்

விசாரணை மேற்கொண்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ரத்தினக்குமார், ஆய்வாளர் ராஜா முகமது, ஆகியோர் மேற்படி ஆவணங்களை பெற்றுள்ளார்கள். அதசாஆ.146 வருமானவரி கணக்கானது எதிரியின் மனைவி பெயரில் உள்ளதை எதிரி விசாரணை அதிகாரியிடம் ஆஜர்படுத்தினார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதசாஆ.149 முதல் 161 வரையிலான ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்றால் சரிதான். அதசாஆ.161, 163, 164, 197, 198, 199, 200, 201, 202 ஆகிய ஆவணங்களை கையெழுத்து நிபுணருக்கு ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். அதசாஆ.190,191, 192 ஆகிய ரசீதுகள் யார் பெயருக்கு வழங்கப்பட்டது என்று இல்லை என்றால் சரிதான். அதசாஆ.194, 195, 196, 197 நிரப்பப்படாத புரோநோட்டுக்கள் யார் பெயருக்கு உள்ளது என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அவ்வாவணத்திற்கு பின்பகுதியில் பென்சிலால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பென்சிலால் எழுதியது எதிரி சொக்கலிங்கம் என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது என்றால் சரிதான். விஜிலென்ஸ் மேனுவல் என்பது ஜிஓ மற்றும் சுற்றறிக்கையுடன் கூடியது. பொதுவாக அரசு அலுவலர்கள் ABCD என அவரவர்கள் வாங்கும் வருமானத்திற்கு ஏற்றார்போல் பிரிக்கப்படுவார்கள் என்றால் சரிதான். பொதுவாக விஜிலென்ஸ் வழக்கு, Trap and non Trap case என பிரிக்கப்படும் என்றால் சரிதான். Rule 55 of Vigilance Manual ல் non Trap case பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக விஜிலென்ஸ் கமிசனரிடம் அனுமதி பெற்றுத்தான் பதிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. Non Trap வழக்கு பதிவு செய்த 6 மாத காலத்திற்குள் விசாரணை முடிக்கப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. ஆனால் Vigilance Manual விதி 66ல் Non Trap வழக்குகளில் 6 மாதகாலத்திற்குள் விசாரணை முடிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Vigilance Manual விதி 70ன்படி

ஆய்வுக்காலம் அதிககாலத்திற்கோ, குறைந்தகாலத்திற்கோ இருக்கக்கூடாது என்றும் பெரும்பாலும் ஆய்வுக்காலமானது 4 முதல் 7 வருடங்களுக்குள் இருக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலும் தேவைப்படும்போது மேற்படி ஆய்வுக்காலத்தை மாற்றிக்கொள்ளலாம் என மேனுவலில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு ஆய்வுகாலத்தை மாற்றிக்கொள்ளும்போது அதற்குரிய விளக்கத்தை கண்டிப்பாக கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். சேலத்தில் மரகதம் பெயரில் உள்ள வீட்டில் உள்ள பொருட்களையோ, கட்டுமானங்களையோ ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றால் எனக்கு முன்னர் விசாரணை செய்த அதிகாரியிடம்தான் கேட்கவேண்டும். இந்த வழக்கில் எதிரியுடன் சேர்த்து 4 எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் அவர்களை நீக்கம் செய்ததற்கு தனியாக அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக சேர்த்துள்ள அனைத்து ஆவணங்களும் இவ்வழக்கிற்காக வேண்டும் என்றே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் குடும்பத்தினர்கள் அவரர்களது தனியான சம்பாத்தியத்தை கொண்டும் விவசாயம் மூலம் வந்த வருமானத்தைக்கொண்டும் அவரவர்கள் பெயரில் பெற்ற சொத்தை எதிரியின் வருமானத்தில் காட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. விஜிலன்ஸ் மேனுவலுக்கு எதிராக இந்த வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

நீதிமன்றக் கேள்வி–

கேள்வி– தினேஷ்குமார் பெயரில் சொத்துக்கள் அவர் மைனராக இருக்கும்போது கிரையம்பெறும்போது கார்டியனாக யார் பெயர் காட்டப்பட்டுள்ளது?

பதில்– அதசாஆ.117 கிரைய ஆவணம் தினேஷ்குமார் பெயரில் ஏற்பட்டுள்ளது. கார்டியனாக யாரும் இல்லை. ஆய்வுக்காலத்தில் முதல் 4 ஆண்டுகள் தினேஷ்குமார் மைனராகவும், அதற்கு பின் 6 ஆண்டுகள் மாணவராக இருந்துள்ளார்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.18 15:05:32 +0530

Principal District Judge,
Dindigul.